# அகிலத்திற்கான சுவிசேஷம் செயல்பாட்டில்

*மோசேயின் நியாயப்பிரமாணத்தை விட்டுவிடுவதென்பது ஆபிரகாமின் பிள்ளைகளுக்குக் கடினமாயிருந்தது. பண்டிகைகள், பலிகள், சடங்குகள், போஜன முறைமைகள் ஆகியவற்றிலிருந்து, அழைக்கப்பட்ட தனி வாழ்வுக்கு மாறுவதென்பது திகைப்பூட்டும் எண்ணிக்கையிலான மாற்றங்கள் உடையதாய் இருந்தது. வெறுக்கப்பட்ட புறஜாதியாரை ஒவ்வொரு வழியிலும் தங்களுக்குச் சமமாகப் பாவிப்பது என்பது இந்த யூதர்களுக்கு ஏற்றுக் கொள்ள முடியாத மாற்றங்களில் ஒன்றாயிருந்தது.*

*இந்த மாற்றங்கள் மிகவும் கடினமாயிருந்ததற்கான முக்கியமான ஒரு காரணம் யூதர்கள் நியாயப்பிரமாணத்தைத் தவறாகப் பயன்படுத்தியிருந்தார்கள் என்பது ஆகும். யூதர்கள் முரட்டுத்தனமுள்ளவர்களாக, சட்டக் கோட்பாடுள்ளவர்களாக, இனமேன்மை பாராட்டுபவர்களாக அல்லது சுயநீதியுடையவர்களாக ஆவதற்காகத் தேவன் நியாயப்பிரமாணத்தை வடிவமைக்கவில்லை. இருந்தாலும், மாய்மாலம், சுயநீதியுள்ள யூதர்களிடத்தில் இயேசு தம் ஊழியத்தின்போது மிகக் கடுமையாகக் கடிந்து கொண்டபொழுது இந்த நடக்கைகளை ஒருவர் காணாது தவற விடுவது கடினமாயிருந்தது. மத்தேயு 23ல் மட்டும் பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களின் நிலைமையை இயேசு விளக்கும்போது "ஐயோ" என்ற வார்த்தையை ஏழு முறைகள் பயன்படுத்தினார். அவர் இந்த "ஐயோ"க்களைக் கூறுகையில், ஒருமுறை தவிர மற்ற எல்லா இடங்களிலும் அவர்களை மாயக்காரரென்று அழைத்தார் - அந்த வார்த்தையைக் கூறாத அந்த ஒரு இடத்தில் அவர் அவர்களைக் குருடரான வழிகாட்டிகள் என்று கூறினார் (வ. 16).*

*நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுவதால் தேவனுடைய பார்வையில் தாங்கள் நீதிமான்களாக்கப்பட முடியும் என்று*

*நம்பியதால் இம்மதத் தலைவர்கள் நியாயப்பிரமாணத்தைத் தவறாகப் பயன்படுத்தினார்கள். பவுல் இந்த நிலையைக் குறித்து உடைந்த இருதயத்துடன் புலம்பினார் (ரோமர் 9:1-5). அவர்களுடைய வைராக்கியத்தை அவர் பாராட்டினாலும் கூட, அவர்கள் நியாயப்பிரமாணத்தை பின்பற்றுவதால் தங்களைத் தாங்களே நீதிமான்களாக்கிக் கொள்ள நியமித்துக் கொண்ட யூதத் தலைவர்களின் விருப்பத்தை அவர் கடிந்து கொண்டார் (ரோமர் 10:1-4). யூதர்கள் தவறான எண்ணப் போக்கை வளர்த்துக்கொண்டதினால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா தங்கள் நன்மைக்காக மட்டுமேயான வர் என்று நம்பினார்கள். ஆபிரகாமின் பிள்ளைகள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் என்றும், தேவனுடைய கிருபையைப் பெறுவதற்கான வாய்ப்பைப் புறஜாதியார் ஒருபோதும் பெறுவதில்லை என்றும் அவர்கள் நம்பினார்கள். புறஜாதியார் என்பவர்கள் நாய்களைக் காட்டிலும் சிறந்தவர்கள் அல்ல என்று யூதர்கள் நம்பினார்கள்.*

*இந்த இனவுணர்வும், காரணமற்ற நாட்டுணர்வும் முதல் நூற்றாண்டிலிருந்த யூதர்களை, உலக வரலாற்றில் இதற்கு முன் அரிதாகவே காணப்படக்கூடிய சுய திருப்தி, சுய நீதி மற்றும் குறுகிய மனப்பான்மை என்ற அச்சில் வார்த்தன. இந்த அடிப்படையான பிரச்சனையானது நடபடிகள் முழுவதிலும் மறுபடி மறுபடி ஒலியெழுப்புதலுடன் மேல் மட்டத்திற்கு வருகின்றது.*

*குறுகிய மனப்பான்மை என்ற பிரச்சனையைப் பொறுத்த மட்டில், ஆவிக்குரிய குருட்டாட்டத்தினால் அப்போஸ்தலர் கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போஸ்தலர் களால் புறஜாதியார் பொதுவாகவே தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருந்தாலும், ஏவுதலினால் அவர்கள் கூறிய திட்டவட்டமான கூற்றுக்களில் புறஜாதியாரின் இரட்சிப்பும் உள்ளடங்கியிருந்தது. "சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16:15) என்று இயேசு அவர்களுக்குக் கூறிய பொழுது, "ஒவ்வொரு யூத சிருஷ்டிக்கும் சுவிசேஷத் தைப் பிரசங்கியுங்கள்'' என்று அவர் கூறுவதாகப் புரிந்து கொண்டார்கள். "சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" என்று இயேசு கூறிய பொழுது (மத். 28:19), "ஒவ்வொரு நாட்டிலும் உள்ள சகல யூதர்களையும் சீஷராக்குங்கள்'' என்று அவர்*

அர்த்தப்படுத்தியதாக அப்போஸ்தலர்கள் நம்பினார்கள். பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு, வாக்குத்தத்தமானது அந்த நாளில் அங்கிருந்தவர்களுக்கு மட்டுமல்லாது, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" (அப். 2:39) என்று பிரசங்கித்தார். ஒருவேளை, பேதுரு இக்கூற்றைப் பிரசங்கிக்கையில் மற்றும் அங்கிருந்த மற்ற அப்போஸ்தலர்கள் அச்செய்தியைக் கேள்விப்பட்டுப் பிரசங்கிக்கையில், அது தூரத்தில் உள்ள எந்த யூதர்களுக்குமானது என்று அர்த்தப்பட்டதாக அவர்கள் நம்பியிருக்கலாம். ஆகையால் அப். 2ல் புகழ்பெற்ற நாளாகிய பெந்தெகொஸ்தே நாள் தொடக்கத்தன்று, சுவிசேஷத்தின் கிருபையை எந்த ஒரு புறஜாதியாருக்கும் வழங்குவதை அப்போஸ்தலர்கள் எண்ணாதிருந்தார்கள்!

பிற்பாடு சாலொமோன் மண்டபத்தில் பேதுரு பிரசங்கிக்கும் பொழுது, ஆபிரகாமிடத்தில் ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்களில் "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" (அப். 3:25) என்பதும் உள்ளடங்கியிருந்ததாகக் கூறினார். ஒருவேளை, குறுகிய மனப்பான்மையுள்ள யூதர்கள் இதை யூதக் குடும்பங்கள் அனைத்தையும் அர்த்தப்படுத்தியதாக எடுத்துக் கொண்டிருக்கலாம், ஆனால் தேவன் இதை இனவேறு பாடின்றி, பூமியின் எல்லாக் குடும்பங்களும் உள்ளடங்குவதாகவே அர்த்தப்படுத்தினார்.

தர்சுப் பட்டணத்தில் சவுல் மனமாற்றத்தின் பொழுது, அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்த அனனியாவிடம் சவுல், "புறஜாதிகளுக்கும் ... என்னுடைய [இயேசுவினுடைய] நாமத்தை அறிவிக்கிறதற்காக" (அப். 9:15) ஏற்படுத்தப்பட்டார் என்று கூறப்பட்டது. சபை தொடங்கி நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு சவுல் மனம்மாற்றப்பட்டதால், தேவன் அனனியாவிடம் கூறியதைப் பற்றி அனனியா மற்றவர்களுக்குக் கூறியிருப்பார். இவ்வளவு நீண்ட காலம் இந்த முக்கிய உண்மையை அப்போஸ்தலர்களும் யூதச் சகோதரர்களும் கண்டு கொள்ளாதிருக்க முடிந்ததென்பது புதிரானதாகவே உள்ளது.

அப்போஸ்தலர்கள் புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை அளிப்பதற்கு கூடுதலாகப் பல அற்புதங்களும் பல வருடங்களும் அவர்களுக்குத் தேவைப்பட்டன! ரோம நூற்றுக்கதிபதியாயிருந்த கொர்நேலியுவின் வீட்டுக்குச் செல்லும்படி

*பேதுருவைக் கடைசியில் இணங்கச் செய்வதற்கு, கூடுதலான வெளிப்பாடும் அற்புதங்களும் தேவையாயிற்று, இவ்வித மாகவே முதல்முதலாய்ப் புறஜாதியாரின் மனமாற்றம் நிறை வேறியது (அப். 10). அதற்குப் பிறகும் கூட, பேதுரு அதே வகை யான இனமேன்மை பாராட்டுதலினால் மனதில் இடுக்கண் கொண்டிருந்த (யூத) கிறிஸ்தவ சகோதரர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு, தம் செயல்களுக்குத் தற்காப்பு வாதம் கூறும்படி அழைக்கப்பட்டார் (அப். 11:1-18). இந்தப் பிரச்சனை பற்றி தேவனுடைய சத்தியம் வெளிப்படுத்தப்பட்ட தான நடபடிகளின் மனதை கவரும் ஒரு பாடமாயிருக்கின்றது.*

# உலகளாவிய ஒரு எண்ணப்போக்கு

***காலம் உட்பட்டது***

*அப். 2ல் உள்ள பெந்தெகொஸ்தே நாளின் நிகழ்ச்சிகள் கி.பி. 33ல் நடந்ததாகப் பொதுவான நாட்காட்டிக் கணக்குகள் கூறுகின்றன. கொர்நேலியுவின் மனமாற்றமானது (அப். 10) கி.பி. 38-40ல் நடந்திருக்கலாம் என்று கல்வியாளர்கள் பலரால் கணிக்கப்படுகின்றது. புறஜாதியார் மற்றும் விருத்தசேதனம் பற்றிய தொடர்ந்த குழப்பங்களும் கேள்விகளும் (கி.பி. 51ல் நடைபெற்றதெனக் கல்வியாளர்கள் கணக்கிட்ட) எருசலேமின் விசேஷக் கூட்டங்கள் அப். 15 நடைபெற்ற காலம் வரைக்கும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.*

*இனங்களுக்கிடையிலான இவ்விதமான எண்ணப் போக்கின் இடுக்கண்கள் கிறிஸ்தவர்களின் மத்தியிலே கூட தீர்த்து வைக்கப்படுவதற்கு அதன் பிறகு ஏறக்குறைய இருபது ஆண்டுகள் - இரண்டு பத்தாண்டுகள் - ஆயிற்று! பரிசுத்த ஆவியானவரால் அப்போஸ்தலர்கள் ஏவப்பட்டிருந்தார்கள் என்ற வெளிச்சத்தின் கீழ்க் காண்கையில் இது அதிர்ச்சிக் குள்ளாக்குவதாகவே இருக்கின்றது. தேவனுடைய ஏவுத லானது அவர்களின் மனதில் ஆழப்பதிருந்த எண்ணப் போக்கு களை மாற்றியிருக்க அவசியமில்லை. தேவனுடைய சத்தியங் களைப் படிப்படியாகப் புரிந்து கொள்ளுதல் மட்டுமே அப்போஸ்தலர்கள் கடைசியில் தங்கள் எண்ணப் போக்கு களையும் முடிவுகளையும் திருத்திக் கொள்ளும்படி வழி*

*நடத்தியது.*

***மாற்றம் உட்பட்டது***

*நடபடிகளானது நான்கு குறிப்பிட்ட எண்ணப் போக்குகளைப் பதிவு செய்துள்ளது. முதலாவது, பின்வருமாறு விளக்கக் கூடிய எண்ணப் போக்கை ஆதிக் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்தார்கள்: "எபிரெயராக இருந்து இயேசுவை நமக்கு மட்டுமே மேசியாவாகக் கொண்டிருப்பதென்பது மாபெரும் விஷயமல்லவா?" (இந்த எண்ணப் போக்கானது அப். 1 முதல் 7 வரை காணப்படுகின்றது).*

*இரண்டாவது, கூடுதலாக மனவெறுப்புடன் கூடிய ஒரு எண்ணப் போக்கு வெளிப்படுத்தப்பட்டது: "சமாரியாவில் இருக்கும் யூத மார்க்கத்தமைந்தவர்களுக்குப் பிரசங்கிப்ப தென்ற கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோம், ஆனால் அதைப் பற்றி நாம் அதிக உணர்வெழுச்சியடையமாட்டோம்" (இது அப். 8ல் காணப்படுகின்றது.)*

*மூன்றாவதாக, மிகவும் பழமையான வாதம் உள்ள எண்ணப் போக்கானது காணப்பட முடியும்: "பேதுருவே, புறஜாதியாருக்கு ஞானஸ்நானம் தருவதன் மூலம் நீங்கள் அர்த்தப்படுத்துவது என்ன? தேவன் விரும்பினால் அவரையும் அவர் வீட்டாரையும் ஏற்றுக் கொள்ளட்டும், ஆனால் அவர்கள் விருத்தசேதனத்தைக் கைக்கொள்ள வேண்டும்." (இது அப். 10 முதல் 14 வரை காணப்படுகின்றது.)*

*நிறைவாக, சரியானதும் ஏற்புடையதுமான நான்காவது எண்ணப் போக்கொன்று புரிந்து கொள்ளப்பட்டு நடை முறைப்படுத்தப்பட்டது: "கிறிஸ்து ஒவ்வொருவருக்காகவும் மரித்தார் என்பதை இப்பொழுது நாங்கள் புரிந்து கொள்கின் றோம், நாங்கள் இனி சுவிசேஷத்தை ஒவ்வொரு சிருஷ்டிக்கும் அறிவிப்போம்/பிரசங்கிப்போம்." (இது அப். 15 முதல் 28 வரை காணப்படுகின்றது.)*

## ***உலகளாவிய வகையில் பிரசங்கித்தல்***

*கொர்நேலியுவின் நிகழ்ச்சியில் முற்றிலுமான ஒரு திருப்பம் நேரும் வரையிலும் யூதர்கள் மற்றும் யூதமார்க்கத்தமைந் தவர்கள் தவிர வேறு எவருக்கும் பிரசங்கிப்பதில் அப்போஸ்*

தலர்கள் தவறியிருந்தார்கள் (அப். 10:1-4). ரோமாபுரிப் பேரரசில் அவர் வழக்கத்திற்கு மாறான ஒரு தொழில் முறைப் போர் வீரராக இருந்தார். அவர் தேவபக்தியும், தேவபயமும், பெருந்தன்மையும், ஜெபம் நிறைந்தவருமாய்க் காணப் பட்டார். மேலும், அவரது சொந்த வேலைக்காரர்களே அவரைக் குறித்து நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூதஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவரு மாயிருந்தார் என்று சான்று கொடுத்திருந்தார்கள் (வ. 22). தேவனுடன் அவர் ஒரு வகையான உறவு கொண்டிருந்தார் ஆனால் அவர் ஒரு கிறிஸ்தவராய் இருக்கவில்லை.

அப். 10ல் காணப்படுகிறபடி, கொர்நேலியுவின் நிகழ்ச்சிகள் நான்கு அற்புதங்கள் உட்பட்டுள்ளன. முதலாவது, கொர்நேலி வுக்கு ஒரு தூதன் தரிசனமாகி, சுவிசேஷப் பிரசங்கியாரான பேதுருவை அழைப்பிக்கும்படி அவருக்குக் கட்டளை கொடுத்தார் (அப். 10:3-7). இரண்டாவது, பேதுரு ஞானதிருஷ் டியடைந்தவராய் ஒரு தரிசனத்தில், பரலோகத்திலிருந்து/ வானத்திலிருந்து இறக்கப்பட்ட கூடு ஒன்றில் பல விலங்கு களைக் கண்டார் (வ. 9-16). அக்கூடு இறக்கப்பட்ட மூன்று முறைகளிலும், அவ்விலங்குகளில் சிலவற்றை அடித்துப் புசிக்கும்படிப் பேதுருவுக்குக் கூறப்பட்டது. அந்த விலங்கு களின் கூட்டத்தில், மோசேயின் ஒழுங்கு முறைமைகளின்படி அசுத்தமானவைகள் என்று கூறப்பட்டிருந்த விலங்குகளும் உள்ளடங்கியிருந்ததால், அவைகளைக் கொன்று உண்பதைப் பேதுரு ஏற்க மறுத்து விட்டார். கொர்நேலியுவின் வேலைக் காரர்கள் பேதுருவைப் பற்றி விசாரித்துக் கொண்டிருக்கும் போது, மூன்றாவது அற்புதம் நடந்தது, பரிசுத்த ஆவியானவர் பேதுருவை அவர்களுடன் செல்லும்படி அறிவுறுத்தினார் (வ. 17-22). நான்காவது அற்புதத்தில், கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தார், அவர்கள் பற்பல பாஷைகளில் பேசி, தேவனைப் புகழ முடிந்தது (வ. 44-46).

இந்த அற்புதங்களில் எதுவும் கொர்நேலியு மற்றும் அவருடைய வீட்டாரின் பாவங்களை மன்னிக்கவில்லை. இந்த அற்புதங்களில் எதுவும் அவர்களுடைய வாழ்வில் புதுப் பிறப்பை உண்டாக்கியிருக்கவில்லை. இந்த அற்புதங்கள் நிறைவேற்றியது என்ன என்பதை நெருங்கிக் காணுங்கள்.

முதலாவது, கொர்நேலியுவுக்குத் தூதன் தரிசனமானது சுவிசேஷ ஊழியரை அவர் அழைப்பிக்கும்படி செய்தது. தேவன் கட்டளையிட்ட யாவற்றையும் தாமும் தம் வீட்டாரும் செய்யத் தயாராயிருப்பதாகக் கொர்நேலியு பேதுருவிடம் கூறினார் (வ. 33). பின்னாளில், மறுப்புரைத்த சகோதரர்களின் முன்னிலையில் பேதுரு தமது செயல்பாடுகளுக்கான தற்காப்பு வாதத்தைக் கூறியபோது, கொர்நேலியு தாம் இரட்சிக்கப் படுவதற்கேற்ற வார்த்தைகளைக் கூறும் ஒரு மனிதரை அழைப்பிக்கும்படிக் கூறப்பட்டதாகச் சொன்னார் (அப். 11:13, 14). கொர்நேலியு இன்னமும் இரட்சிக்கப் பட்டிருந்ததில்லை மற்றும் தேவனுடைய சித்தத்தை அறிந்த போதகர் ஒருவரைத் தாம் அழைப்பித்திருந்ததை அவர் அறிந்தார் என்று இதிலிருந்து ஒருவர் முடிவு செய்தாக வேண்டும். மற்றும், பேதுருவினிடத்தில் விலங்குகள் இருந்த கூடு மும்முறை இறக்கப்பட்டபோது, அது கொர்நேலியுவை இரட்சிக்கவில்லை, அது கொர்நேலியுவின் வேலைக்காரருடன் போகும்படிப் பிரசங்கியாரை இணங்கச் செய்தது. மூன்றாவது அற்புதத்தில், பரிசுத்த ஆவியானவர் பேதுருவை அந்த வேலைக்காரர்களுடன் செல்லும்படி கூறினார், நிறைவாகப் பேதுருவை செசரியாவுக்குச் செல்லும்படி இணங்கச் செய்தார். பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததான நான்காவது அற்புதமானது கொர்நேலியுவை இரட்சிக்க வில்லை. மாறாக அது பேதுருவையும், குறைந்தது மற்ற ஆறு சகோதரர்களையும் இந்தப் புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை அளிப்பது சரியானதும் ஏற்றதும் ஆகும் என்று நம்பச் செய்தது.

பற்பல பாஷைகளில் கொர்நேலியு பேசியது பற்றிப் பல உண்மைகள் கவனிக்கப்பட வேண்டும். அவரும் அவரது வீட்டாரும் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறியும் முன்பாகவே பரிசுத்த ஆவியானவர் அவர்(கள்)மீது இறங்கினார். பேதுரு, "நான் பேசத் தொடங்கிய போது" இது நடைபெற்றது என்று கூறினார். ஆகையால் அவர் இயேசுவைப் பற்றி அவர்களுக்குக் கூறு முன்பே இது நடைபெற்றது (அப். 11:15). அடுத்ததாக, கொர்நேலியுவை இரட்சிப்புக் குள்ளாக்கும் வார்த்தைகள் பேசப்பட்டன; அந்த வார்த்தைகள் பேசப்படும் வரையிலும் கொர்நேலியு பாவங்களில் இருந்து விடுதலை பெற்றிருக்க முடியாது (அப். 11:14). அந்த

*வார்த்தைகள் பேசப்படுவதற்கு முன்பாகவே கொர்நேலியுவின் மீது பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கினார்; ஆகையால், இரட்சிப்பு அப்பொழுதும் கூட நிறைவேறியிருக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியுவின் மீது இறங்கி வந்த நிகழ்ச்சியானது, இந்தப் புறஜாதிக்கு சுவிசேஷத்தை அளிக்கும் படியான பேதுருவின் முடிவைத் தூண்டியது. அவர் அப்போஸ் தலர்கள் யாவரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார், மற்றும் கொர்நேலியுவின் வீட்டாருக்குத் தரப்பட்ட ஆவிக்குரியதான அப்படிப்பட்ட தொரு ஞானஸ்நானமானது இந்தச் சூழ்நிலைக்குத் தேவனு டைய அங்கீகாரத்தைக் கொடுத்தது (அப். 11:16, 17) என்பதை உணர்ந்தார்.*

*இந்த நிகழ்ச்சியின் முடிவில், தமது உரையைக் கேட்ட புறஜாதியாருக்கு “இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ் நானம் கொடுக்கும்படி” (அப். 10:48) கட்டளையிட்டார். அது எட்டு அல்லது பத்து ஆண்டுகளுக்கு முன்பு அப். 2ல் பெந்தெ கொஸ்தே நாளன்று எருசலேமில் இருந்த கூட்டத்தாருக்குப் பேதுரு பிரசங்கித்திருந்த அதே ஞானஸ்நானமாக இருந்தது. ஒரு நபரின் “நாமத்திலே” ஞானஸ்நானப்படுத்துதல் என்றால் அவரின் அதிகாரத்தினால் ஞானஸ்நானப்படுத்துதல் ஆகும். பேதுரு அதே ஞானஸ்நானத்தையே பயன்படுத்தினார், ஏனெனில் இரண்டுமே இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினால் ஆனவையாகும். இருப்பினும், பெந்தெகொஸ்தேயன்று அந்த ஞானஸ்நானம் ‘‘உங்களின் பாவமன்னிப்புக்கென்று’’ (அப். 2:38) என்று பேதுரு அறிவித்திருந்தார். விஷயம் அப்படி யென்றால், கொர்நேலியுவும் அவர் வீட்டாரும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும் வகையிலும் இரட்சிக்கப்படாதிருந் தார்கள். ஆவியானவர் இறங்கி வந்ததென்பது ஞானஸ்நானத் திற்கு முன்பு நடைபெற்றதால், இவ்விஷயத்தில் இந்த வீட்டாருக்கு பரிசுத்த ஆவியானவரின் கிரியையானது நேரடியாக எந்த இரட்சிப்பையும் தரவில்லை என்பது உறுதியாகும்.*

*ஞானஸ்நானம் பற்றிய இந்தப் புரிந்து கொள்ளுதலானது, நடபடிகளில் உள்ள மற்ற எல்லா ஞானஸ்நான நிகழ்ச்சி களுக்கும் மற்றும் ஞானஸ்நானம் பற்றிய உபதேசக் கூற்று களுக்கும் ஏற்றதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளது. தர்சுப்*

*பட்டணத்துச் சவுலுக்கும் கூட, "நீ எழுந்து, ... ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16) என்று கூறப்பட்டது. ஒருவர் ஞானஸ்நானத் தண்ணீரில் இருந்து எழுகின்றபோது, அது கிறிஸ்துவுக்குள்ளான புதிய ஜீவனுக்கான உயிர்த்தெழுதல் ஆகும் என்று பவுல் விளக்கினார் (ரோமர் 6:3, 4). அந்த சந்தர்ப்பப் பொருளில், அந்த உபதேச சட்டத்திற்கு ஒருவர் கீழ்ப்படிந்த பின்புதான்/கீழ்ப்படியும் போதுதான் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுகின்றார் என்றும் பவுல் கூறினார் (ரோமர் 6:17, 18). வேதாகமத்தின் உபதேசங்கள் யாவற்றிலும் ஞானஸ்நானம் என்பது மிகக் குறைவாகப் புரிந்து கொள்ளப்படும் ஒரு உபதேசமாய் உள்ளது. ஒருவேளை இது விசுவாசத்திற்கான தேவனுடைய கடைசிப் பரிசோதனையாய் இருக்கலாம்! மனம் வருந்தி, விசுவாசிக்கின்ற பாவிகள், அர்த்தமே இல்லாமல் காணப் படுகின்ற ஞானஸ்நானம் போன்ற செயலுக்கு தங்களைக் கீழ்ப்படுத்தும் விசுவாசம் கொண்டிருக்கின்றார்களா?*

# *முடிவுரை*

*அகில முழுவதற்கும், ஒவ்வொரு மனித உயிருக்கும் இரட்சிப்பு தரப்படுகின்றது. தேவன் தம்முடைய குமாரனைப் பலியாக ஒப்புக் கொடுத்ததன் மூலம் அந்த இரட்சிப்பை வைத்துள்ளார். தேவனுடைய கிருபையினால் ஆன இரட்சிப் பானது உண்மையில் "எல்லா மனுஷருக்கும் ... பிரசன்னமாகி" (தீத்து 2:11) இருக்கின்றது, ஆனால் கொடுக்க முன் வரப்பட்டுள்ள இந்த ஈவை ஏற்றுக் கொள்வது தனிநபர்களைப் பொறுத்ததாகும்.*

*அறியாமை, ஆணவம், தப்பெண்ணம் மற்றும் இனப்பற்று ஆகியவை இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்களிடையே இருந்த காரணத்தால், மற்ற இனத்தார் மேசியாவுக்கு ஊழியம் செய்ய ஏற்புடையவர்களா அல்லவா என்ற கேள்வியை முடிவுக்குக் கொண்டு வர இருபதாண்டுகள் ஆயிற்று. இனங்களுக்கிடையே இருந்த எதிர்ப்புக் கொள்கையானது சபையில் கூட மெதுவாகவே கரைந்து மறைந்தது.*

*இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனையானது, ஒருவேளை இயேசுவின் கட்டளையைப்*

புரிந்து கொள்வதில் காட்டப்படும் அக்கறையின்மையானது, இனப்பகைமையின் அளவுக்கு இல்லாதிருக்கலாம். உலக மெங்கும் போய், சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று அப்போஸ்தலர்களுக்கு அவர் கொடுத்த கட்டளையில், ஒவ்வொரு தலைமுறையிலும் எல்லாக் கிறிஸ்தவர்களுக்குமான தொடர்ந்த, மறுபடி மறுபடி உள்ள பொறுப்பானது மறைந்துள்ளது. இது, பெந்தெகொஸ்தே நாளில் இருந்து நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும் சுவிசேஷ மானது உலக முழுவதிலும் ஒரு முறையாவது பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று அர்த்தப்படுகின்றதா? அரிதாகவே இவ்வாறு அர்த்தப்படுகின்றது! ஒவ்வொரு தலைமுறையிலும், மீண்டும் மீண்டும் உலகம் முழுவதிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்றே இது அர்த்தப்படுகின்றது!

இன்றைய நாட்களில் வாழும் மக்கள் முந்திய தலைமுறை களுக்கோ அல்லது எதிர்காலத் தலைமுறைகளுக்கோ பிரசங்கிக்க முடியாது. இன்றைய நாட்களில் மக்கள் இப்போதுள்ள தலைமுறைக்கு மட்டுமே பிரசங்கிக்க முடியும். பூமி முழுவதிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்ற தேவனுடைய அறிவுறுத்தலானது இன்னும் வலிவுடைய தாகவும் செல்லத் தக்கதாகவும் உள்ளது. சுவிசேஷமானது எல்லாருக்குமானதாகும், ஆனால் இன்று வாழ்கின்ற கிறிஸ்தவர்களால் கிருபையைப் பற்றிய இந்த நற்செய்தியானது பரப்பப்படாத வரையிலும், இன்றைய உலகமானது அதை ஒரு பொழுதும் கேள்விப்படாது.